# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SUB JUDGE, NANGUNERI.

OS 218 of 2020 C/w 216 of 2020

| | | |
|---|---|---|
| Civil Case No | :: | Pw -3 |
| Name | :: | முருகேஷ்வரி |
| Father's/Husband's Name | :: | |
| Village | : | |
| Taluk | :: | |
| Calling | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 14.07.2026

**முதல் விசாரணை**

நான் இந்த அசல் வழக்கு 216/2020 ல் 3 ம் பிரதிவாதியாவேன். அசல் வழக்கு 218/2020 ல் 3 ம் வாதியாவேன். நான் எனக்காகவும் மற்ற வாதிகளுக்காகவும் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1) 25.01.2006 ம் தேதியிட்ட சர்வே எண்.106/3B எனது கணவர் பெயரில் உள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-1 ஆகும்.

2) 30.08.1995 ம் தேதியிட்ட அமிர்தலிங்க ராஜா வகையறாக்கள் அருணாச்சலம் ஆசாரிக்கு சர்வே எண்.106/3B ல் கண்ட 32 1/2 செண்டு இடத்தை பொறுத்து எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும்.

3) 21.08.2006 ல் மேற்படி அமிர்தலிங்கராஜா சர்வே எண் 106/3B செண்டு 10 ஐ பொறுத்து சிந்துமதிக்கு எழுதி கொடுத்த ஏற்பாட்டு ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-3 ஆகும்.

4) 13.10.2014 ம் தேதியிட்ட சர்வே எண் 106/3B ல் கண்ட செண்டு 5 ஐ பொறுத்து மரியதாசன் நாடார் அருணாச்சலம் ஆசாரியிடம் கிரையம் பெற்ற ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-4 ஆகும்.

5) 08.10.2001 ம் தேதியிட்ட சர்வே எண்.106/3B ல் கண்ட செண்டு 10 ஐ பொறுத்து அமிர்தலிங்க ராஜா, எட்வர்ட் பொன்னையா செல்லக்கண்ணுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-5 ஆகும்.

6) 04.08.2005 ம் தேதியிட்ட சர்வே எண்.106/3B ல் கண்ட செண்டு 32 1/2 ல் 10 செண்டை ஐ பொறுத்து என் கணவரின் சகோதரர் தங்கராஜ் அருணாச்சலம் ஆசாரியிடம் இருந்து கிரையம் பெற்ற ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-6 ஆகும்.

7) 12.12.2006 ம் தேதியிட்ட சர்வே எண்.106/3B ல் கண்ட செண்டு 7 1/2 ஐ பொறுத்து அருணாச்சலம் ஆசாரி, ஆரோக்கிய நிக்சன் மற்றும் அவரின் மனைவி உமா மேரிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-7 ஆகும்.

8) 23.05.2011 ம் தேதியிட்ட சர்வே எண்.106/3B ல் கண்ட செண்டு 5 ஐ பொறுத்து மரியதாசன் நாடார் அவரின் மகளான ஜாக்குலின் பூங்கொடிக்கு எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-8 ஆகும்.

9) 21.11.202023 ம் தேதியிட்ட சர்வே எண்.10/3B ல் கண்ட செண்டு 5 ஐ பொறுத்து ஜாக்குலின் பூங்கொடி மதிவண்ணன் மனைவி ஸ்ரீனா மற்றும் அவரின் மகன்

ஜெபிந்தர் சிங் ஜாக்சன் ஆகியோர்களுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-9 ஆகும்.

10) வழக்கு சொத்தை காண்பிக்கக்கூடிய மாதிரி வரைபடம் வா.சா.ஆ.10 ஆகும்

பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.